இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 15-08-2025



# 79 ஆவது ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடி!

இந்திய நாடு தனது 79 ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகிறது. இது சாதாரணமாகக் கிடைத்த சுதந்திரம் அல்ல. போராடிப் பெற்ற சுதந்திரம் ஆகும். ஓராண்டு, ஈராண்டுப் போராட்டம் அல்ல. இருநூறு ஆண்டுகள் போராடியதால் கிடைத்த சுதந்திரம் ஆகும். அனைவரும் போராடியதால் கிடைத்தது இந்த சுதந்திரம். இதனை அனைவருக்குமானதாகப் பயன்படுத்துவதில்தான் சுதந்திரத்தின் பொருளும், இந்திய நாட்டின் எதிர்காலமும் அடங்கி இருக்கிறது.

**“இந்திய மக்களாகிய நாம், ஒரு இறையாண்மை மிக்க, சமதர்மம் சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசு அமைக்கவும் -**

**அதன் குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி கிடைக்கவும்-**

**சிந்தனையில், சிந்தனையை வெளிப்படுத்துவதில், நம்பிக்கையில், பற்றுறுதியில், மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும் -**

**தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும் உறுதியாக அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும் -**

**தனி ஒருவரின் மாண்புக்கும், சகோதரத்துவத்தை அனைவரிடத்தில் வளர்க்கவும் -**

**நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் விழுமிய முறைமையுள்ள உறுதி பூண்டு - 1949 நவம்பர் 26 ஆம் நாளாகிய இன்று நம்முடைய அரசமைப்பு நிர்ணய சபையில் ஏற்று சட்டமாகவே இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்” -**
என்கிறது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்பு.

இந்த முகப்பை திரும்பத் திரும்ப வாசிக்கும் போது திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது அரசியல் பண்பாடுகளே தவிர வேறல்ல. ஒரு ஆட்சியானது நேர்மையாக, உண்மையாக, நீதியோடு எப்படி நடைபெற வேண்டும் என்பதைத்தான் தனது ஆட்சியியல், அரசியல் இலக்கணமாக இந்திய அரசமைப்புச் சட்டமானது கொண்டுள்ளது.

இந்த முகப்புரையைத்தான் ‘அரசமைப்புச் சட்டத்தின் இதயம்’ என்று சொல்வார்கள். இதற்கு விளக்கம் அளித்த இந்திய நாட்டின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு, ‘மக்கள்தான் அதிகாரத்தின் தோற்றுவாய் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுகிறது’ என்று சொன்னார். அதாவது, இந்திய நாடு எத்தகைய நோக்கம் கொண்டது, எப்படிச் செயல்பட வேண்டும், எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை விளக்குவதுதான் இந்த முகவுரை.

இதில் இருந்து வழுவும் போதெல்லாம், ‘அது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரைதானே தவிர, சட்டமல்ல’ என்று சிலரால் விளக்கம் அளிக்கப்பட்டது. கேசவானந்த பாரதி- கேரள அரசுக்குமான வழக்கில் (1973) தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், “அரசமைப்பின் முகப்பும், அரசமைப்பின் ஒரு பகுதியே” என்பதை உறுதி செய்தது. அரசமைப்புச் சட்டத்தின் உட்பிரிவுகளில் குழப்பம் ஏற்படும் போது, அதனைத் தெளிவுபடுத்தவும் இந்த முகப்புரை பயன்பட்டு வருகிறது.

இந்திய நாடு, அதன் குடிமக்களுக்கு நீதியை வழங்கும் என்பது தான் இதன் உள்ளடக்கம் ஆகும். சமத்துவம், மதச்சார்பற்ற தன்மை, அனைத்து விதமான சுதந்திரம், சுதந்திரமான நீதித்துறை, பத்திரிக்கைச் சுதந்திரம், சுதந்திரமான தேர்தல்கள் ஆகிய அனைத்தும் இதன் உள்ளடக்கம் ஆகும்.

**இந்திய அரசமைப்பானது பிரிட்டனின் நாடாளுமன்ற அரசாங்க முறையை ஏற்றுக் கொண்டது. ஒருவருக்கு ஒரு வாக்கு உரிமை தரப்பட்டது. வயது வந்த இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சம வாக்குரிமை அளிக்கப்பட்டது. முன்னேறிய மேலை நாடுகளில்கூட அனைவருக்கும் வாக்குரிமை என்பது அளிக்கப்படவில்லை. படிப்படியாகத் தான் அளிக்கப்பட்டது. இங்குதான் 21 வயது நிரம்பியவருக்கு வாக்குரிமை தரப்பட்டது. அதுவும் 18 வயதாக 1988 ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது.**

மக்களால்தேர்ந்தெடுக்கப்படும்மக்களாட்சிதான், இந்தியஅரசமைப்பின் குணம் ஆகும். இத்தகைய மக்களாட்சியை உருவாக்க வேண்டிய கடமையை தேர்தல் ஆணையத்துக்கு அரசமைப்புச் சட்டம் வழங்குகிறது. தனித்த அதிகாரங்கள் பொருந்திய அமைப்பு இது. ஆனால் இன்றைய தினம் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சந்தேகத்துக்குரியதாக மாறி இருக்கின்றன. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வின் தொங்கு சதையாக மாறி, சர்ச்சையில் சிக்கி இருக்கிறது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையர்கள் தேர்வில் பல்வேறு திருகு வேலைகளை பா.ஜ.க. அரசு செய்தது. தேர்தலில் பல்வேறு திருகு வேலைகளை தேர்தல் ஆணையர்கள் செய்கிறார்கள். பா.ஜ.க.வைக் காப்பாற்றுவதற்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பலியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் இந்தியாவில் முதன்முதலில் 1998 ஆம் ஆண்டு கேரளாவின் வடக்கு பரவூர் சட்டசபை இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. 2004 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இந்தியா முழுவதும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நவீன முறையையும் தனது சதிக்கருவிகளாகப் பா.ஜ.க. பயன்படுத்தப் பார்க்கிறது. இத்தனை ஆண்டுகள் கழித்தும் முழுமையான, சுத்தமான ஒரு வாக்காளர் பட்டியலைக் கூட தயாரிக்க முடியாத நிலைமையில்தான் தேர்தல் ஆணையம் இருக்கிறது.**

காங்கிரஸ்தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் ஆணையத்தின் அனைத்துச் சீரழிவுகளையும் கிழித்துத் தொங்கவிட்டுள்ளார். அவரது குற்றச்சாட்டில் ஒன்று கூட தேர்தல் ஆணையத்தால் மறுக்கப்படவில்லை. மக்களாட்சி மாண்புக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் நெருக்கடி இது.

பீகாரில் ஒரே நேரத்தில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள். இறந்துவிட்டதாகச் சொல்லி நீக்கப்பட்ட வாக்காளர்களைக் கூட்டி வைத்து டீ சாப்பிட்டுள்ளார் ராகுல் காந்தி. இதை விடக் கேவலம் இருக்க முடியுமா? இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கிய உரிமையைக் கிழித்தெறிந்திருக்கிறது தேர்தல் ஆணையம்.

**இந்தியா தனது 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்நாளில் மக்களாட்சித் தத்துவம், பா.ஜ.க.வால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. மக்களாட்சியைக் காக்க தொடர்ந்து போராடுவோம்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” மற்றும் “நலம் காக்கும் ஸ்டாலின்” ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்ட அறிவிப்புகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**அறிவிப்பு 2-**

தற்போது தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்களுக்கு தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் மூலமாக, நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களின் எதில்கால நலன்களையும், வாழ்வாதரத்தையும் முழுமையாக உறுதி செய்யக்கூடிய வகையில், இந்த நிதியுதவியுடன் கூடுதலாக இந்தப் பணியாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் அளவிற்கு காப்பீடு இலவசமாக வழங்கப்படும். இதனால், பணியின் போது இறக்க நேரிடும் தூய்மைப் பணியாளர்கள் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும்.

**அறிவிப்பு 3-**

தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திட சுய தொழில் தொடங்கும்போது, அத்தொழில் திட்ட மதிப்பீட்டில், 35 விழுக்காடு நிதி அதிகபட்சமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும். மேலும், இந்த கடனுதவியைப் பெற்று தொழில் தொடங்கி கடன் தொகையை தவறாமல் திருப்பிச் செலுத்துவோருக்கு 6 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். இந்தப் புதிய திட்டத்திற்கு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**அறிவிப்பு 4-**

தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகள் எந்தப் பள்ளியில் பயின்றாலும், அவர்களுக்கு உயர் கட்டணச் சலுகைகள் மட்டுமின்றி, விடுதிக் கட்டணம், புத்தகக் கட்டணங்களுக்கான உதவித் தொகையை வழங்கிடும் வகையில், “புதிய உயர் கல்வி உதவித் தொகை திட்டம்” ஒன்று செயல்படுத்தப்படும்.

**அறிவிப்பு 5-**

நகர்ப்புறங்களில், சொந்த வீடு இல்லாத தூய்மைப் பணியாளர்களுக்கு வரும் மூன்று ஆண்டுகளில், தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் உதவியோடு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்கள், தூய்மைப் பணியாளர்கள் வசிக்கும் இடத்திலேயே வீடு கட்டுதல் என பல்வேறு முறைகளின் கீழ் 30,000 குடியிருப்புக்கள் கட்டித் தரப்படும். கிராமப் பகுதிகளில் வசிக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் இந்த வீட்டு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும்.

**அறிவிப்பு 6 -**

தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், காலை உணவு சமைப்பதற்கும், அதை பணிபுரியும் இடத்திற்கு கொண்டு வந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்களால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்த 6 முக்கியமான அறிவிப்புகள் நம்முடைய தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைய அமைச்சரவையில் இந்தத் திட்டங்களை சிறப்பாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, நான் அரசின் சார்பில் கேட்டுக் கொள்வது, தூய்மைப் பணியாளர்கள் உங்களுடைய உணர்வுகளை மதிக்கக்கூடிய முதலமைச்சராக உங்களுக்கான நலத் திட்டங்களை உருவாக்க வேண்டிய அதை முன்னுரிமை அடிப்படையில் சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் நலனுக் காக இந்தத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சராக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அறிவித்திருக்கக்கூடிய இந்தத் திட்டங்களின் பின்னணியில் அரசு உங்கள் மீது கொண்டிருக்கக்கூடிய அக்கறையை மனதில் வைத்து பொதுமக்களுடைய நலனை கருதி, அதைப்போல உங்களுடைய மற்ற கோரிக்கைகளை எல்லாம் மனதில் வைத்து நீங்கள் உங்களுடைய வேலைநிறுத்தத்தை விடுத்து பணிகளுக்குத் திரும்பி அந்தப் பணிகளில் ஈடுபடத்திடவேண்டும் என்று நான் அரசின் சார்பாக மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## தூய்மைப் பணியாளர்களுக்கு மேலும் பல சலுகைகள்!

- ★ **தூய்மைப் பணியாளர்களின் தொழில் சார் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்திடத் தேவையான தனித் திட்டம் செயல்படுத்தப்படும்!**
- ★ **தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.5 லட்சம் அளவிற்கு இலவசக் காப்பீடு!**
- ★ **பணியின் போது இறக்க நேரிடும் தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம்!**
- ★ **தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு - புதிய உயர் கல்வி உதவித் தொகைத் திட்டம்!**
- ★ **நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச காலை உணவு!**

ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

# செஞ்சி ஒன்றியத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 15 -
செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் “திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ், பிரபா சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை தொடங்கி வைத்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத் துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், சர்க்கரை, நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

முகாமில் நல்லான் பிள்ளை பெற்றால், போத்துவாய், செத்தவரை, தடாகம் ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினர்.

நிகழ்ச்சியில் செஞ்சி மேற்கு ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா, மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள் முரளி, கமலா, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தீர்தமலை,

ரங்கநாயகி குபேரன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ரஞ்சித் குமார், நிர்வாகிகள் வாசு, கதிரவன், சுதா பாஸ்கர், அய்யாதுரை, ஸ்டீபன், இளைஞர் அணிஅமைப்பாளர் சுரேஷ், துணை அமைப்பாளர் மலர்மன்னன் உள்ளிட்டதுறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (14.08.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் பள்ளிக் கல்வித் துறை சார்ந்த சட்டப் பேரவை அறிவிப்புகள், திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் எதிர்கால இலக்குகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பள்ளிக் கல்வித் துறையின் இயக்ககம் வாரியாக விரிவான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் மரு.சந்தர மோகன் B, மாநிலத் திட்ட இயக்குநர் மரு.மா.ஆர்த்தி பள்ளிக் கல்வித் துறை சிறப்பு செயலாளர்/ தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம் /இயக்குநர், பொது நூலகத் துறை திருமதி எஸ்.ஜெயந்தி பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், உறுப்பினர் செயலாளர் (மாதிரிப்பள்ளிகள்) இரா.சுதன்(வி.ஓய்வு), தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் பெ.குப்புசாமி, உறுப்பினர் செயலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் முனைவர். சி.உஷாராணி, இயக்குநர் அரசு தேர்வுகள் இயக்ககம் திருமதி ந.லதா மற்றும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர்கள் பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.